18.04.2026. O.S.No.1 of 2025 D.W.1 - புண்ணியக்கோட்டி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை**

நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம். கிருஷ்ணன் மகன் வேலுவை எனக்கு தெரியும். வேலு என் உறவினரா என்றால் என் மகனுக்கு உறவினர். என் மகன் பெயர் சந்தானம். வேலு மூலமாகத்தான் வாதி தேவராஜ்-ஐ தெரியும். 25.01.2022 அன்று வாதி பெயருக்கு ஒரு அடமான கடன் பத்திரம் எழுதி கொடுத்தேனா என்றால் சரிதான். அது பேரணாம்பட்டு சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

அன்றைய தேதியில் வேலுவும், சந்தானமும் என்னுடன் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்தார்கள் என்றால் சரிதான். அடமான கடன் சம்பந்தமாக அசல் வழக்கு எண் 299/2024 என்ற வழக்கு குடியாத்தம் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அன்றைய தேதியில் ரூ.4,00,000/- மதிப்பு கொண்ட தலா இரண்டு புரோட்டுக்களை எழுதி கொடுத்துள்ளேன் என்றால் ரூ.2,00,000/-க்கு அடமானம் போட்டேன். அப்போது இரண்டு வெற்று பாண்டுகளில் என்னிடம் கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள்.

என்னிடம் காண்பிக்கப்படும் வா.த.சா.ஆ.ல் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என் மகன் சந்தானத்தினுடையது என்றால் சரிதான்.

என்னிடம் காண்பிக்கப்படும் வக்காலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் எதிர்வழக்குரையில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். என்னுடைய எதிர்வழக்குரையில் அசல் மற்றும் வட்டி செலுத்திவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் அடமானம் வைத்த தொகை ரூ.2,00,000/−க்கு அசல் கொடுக்கவில்லை 2024 வரை வட்டி கொடுத்துள்ளேன்.

வட்டி கொடுத்ததற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவர் நேரில் வந்து பணம் வாங்கிக்கொண்டு போவார். 19.07.2024 அன்று வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றும் அதை நான் வாங்கினேனா என்றால் ஞாபகமில்லை. அது சம்பந்தமாக நான் பதில் அறிவிப்பு ஏதாவது கொடுத்தேனா என்றால் ஞாபகமில்லை.

அடமான கடன் பத்திரத்தில் உள்ள கையொப்பமும், புரோநோட்டில் உள்ள கையொப்பத்தையும் ஒப்பிட்டு பார்த்தால் இரண்டு புரோநோட்டுக்களில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது என்று தெரியும் என்றால் இரண்டு வெற்று புரோநோட்டுகளிலும் கையொப்பம் செய்தது உண்மை. என்னிடம் காண்பிக்கப்படும் வா.த.சா.ஆ.1 மற்றும் 2 புரோநோட்டுகளில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். ஆனால் புரோநோட்டுகளில் எதுவும் எழுதப்படவில்லை நான் கையொப்பம் செய்தபோது. இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை.

வெற்று புரோநோட்டை திருப்பி கொடுக்கும்படி வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை. நான் கடன் வாங்கியது உண்மை என்றும் வாதியை ஏமாற்றும் நோக்கத்துடன் நான் தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.04.18 17:20:33 +0530